

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை வட்டம், குல்லூர்சந்தையில் இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் ரூ.15.86 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 244 குடியிருப்புகளுக்கான சாவிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, தலைமையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் பயனாளிகளுக்கு வழங்கி, புதிய வீடுகளை பார்வையிட்டார். உடன் முன்னாள் சேர்மன் சுப்பாராஜ், ஒன்றிய செயலாளர்கள் பாலகணேஷன், பொன்ராஜ், இளைஞர் அணி மாரிமுத்து ஆகியோர் கலந்து கொண்டனர்.

### விருதுநகர் – திருவண்ணாமலை – தூத்துக்குடி மற்றும் சிவகங்கை மாவட்டங்களில்

# 8 இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 772 புதிய வீடுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, அக். 8 –

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 6.10.2025 அன்று தலைமைச் செயலகத்தில், பொது மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் விருதுநகர், திருவண்ணாமலை, தூத்துக்குடி மற்றும் சிவகங்கை ஆகிய 4 மாவட்டங்களில் உள்ள 8 இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 44 கோடியே 48 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு, 6 கோடியே 58 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் செலவில் அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ள 772 புதிய வீடுகளை திறந்து வைத்தார்.

முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் இனி பாதுகாப்பான, கௌரவமான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ்வதை அரசு உறுதி செய்யும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததுடன், முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள 10,469 வீடுகளுக்கு மாற்றாக புதிய வீடுகள் கட்டித்தரப்படும் எனவும் அறிவித்தார்.

அதன்படி 28 மாவட்டங்களில் உள்ள 69 முகாம்களில் 10,469 புதிய வீடுகள் கட்டுவதற்கு ஆணைகள் வழங்கப்பட்டு, 629 கோடி ரூபாய் செலவில் புதிய வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. இதில் முதற்கட்டமாக 3,510 புதிய வீடுகள் 186 கோடி ரூபாய் செலவில் 19 மாவட்டங்களில் உள்ள 35 முகாம்களில் வீடுகள் கட்டுவதற்கு ஆணைகள் வழங்கப்பட்டு, 3,510 புதிய வீடுகளும் கட்டிமுடிக்கப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக 3,959 புதிய வீடுகள் 236 கோடி ரூபாய் செலவில் 19 மாவட்டங்களில் உள்ள 35 முகாம்களில் வீடுகள் கட்டுவதற்கு ஆணைகள் வழங்கப்பட்டு, இவற்றில், ஏற்கனவே 3 மாவட்டங்களில் உள்ள 4 முகாம்களில் கட்டிமுடிக்கப்பட்ட 236 புதிய வீடுகள் பயனாளிகளிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, மீதமுள்ள 3,723 வீடுகளில் தற்போது விருதுநகர் மாவட்டம் – கண்டியாபுரம், மல்லாங்கிணறு மற்றும் குல்லூர்சந்தை, திருவண்ணாமலை மாவட்டம் – தென்பள்ளிப்பட்டு மற்றும் சொரக்கொளத்தூர், தூத்துக்குடி மாவட்டம் – தாப்பாத்தி மற்றும் மாப்பிள்ளையூரணி, சிவகங்கை மாவட்டம் – சென்னலக்குடி ஆகிய 8 முகாம்களில் 44 கோடியே 48 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 772 புதிய வீடுகளுக்கு 6 கோடியே 58 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் செலவில் அடிப்படை வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டு இன்றையதினம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இவ்வரசால், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் நலன்காக்க அவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் மாதாந்திர பணக் கொடை, துணிமணிகள், பாத்திரங்கள், கல்வி உதவித் தொகை ஆகிய நலத்திட்டங்கள் உயர்த்தப்பட்ட விகிதத்தில் வழங்கப்பட்டு வருவதோடு, இலவச சமையல் எரிவாயு இணைப்பு, அடுப்பு மற்றும் சமையல் எரிவாயு மானியம், மகளிர் சுய உதவி குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி ஆகியவையும் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ச.மு.நாசர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் முனைவர் மா. வள்ளலார், பொதுத்துறை அரசு கூடுதல் செயலாளர் கி.பாலசுப்ரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### நாகர்கோவில் மாநகராட்சி, வடிவீஸ்வரம், சபரி அணை பகுதிகளில்

# சாலை அமைக்கும் பணி கால்வாய்களை தூர்வாரும் பணி!

## மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் ஆய்வு!

நாகர்கோவில், அக். 8 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் பொது மக்களிடம் இருந்து பெறப்பட்ட கோரிக்கையின் பேரில் நேற்று (07.10.2025 - செவ்வாய்க்கிழமை) காலை நாகர்கோவில் மாநகராட்சி 26 வது வார்டுக்குட்பட்ட வடிவீஸ்வரம், சபரி அணை பகுதிகளில் சாலை அமைக்கும் பணி மற்றும் கால்வாய்களை தூர்வாரும் பணி தொடர்பாக மாநகராட்சி அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வில் வடிவீஸ்வரம், சபரி அணை செல்லும் பாதையில் புதிதாக சாலை அமைக்க தேவையான நடவடிக்கை எடுக்க அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார். மழைகாலங்களில் பரக்கின் கால் பகுதியில் தண்ணீர் சீராக செல்லும் வகையில் நடவடிக்கை எடுப்பதற்காக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கால்வாயில் தங்குதடையின்றி தண்ணீர் செல்ல பொக்லைன் இயந்திரம் கொண்டு தூர்வாரி சீரமைக்க அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார். சபரி அணை பகுதியில் பழையாற்றின் கரையோரம் செல்லும் சாலையில் சுடுகாடு உள்ளது. இந்த சுடுகாட்டிற்கு செல்லும் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. அதை சீரமைக்க அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார். அதனை தொடர்ந்து, அப்பகுதியில் உள்ள மாணவிகள் விடுதியில் ஆய்வு மேற்கொண்டார். அங்கு விடுதியை சுற்றியுள்ள புதர்களை அகற்ற அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.

ஆய்வின் போது மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, உதவி செயற்பொறியாளர் ரகுராமன், உதவி பொறியாளர் பழனியம்மாள், தொழில்நுட்ப அலுவலர் அனந்த பத்மநாபன், மாமன்ற உறுப்பினர்கள் பொ.சொர்ணத்தாய், ச.அக்ஷயா கண்ணன், பகுதி செயலாளர் மு.சேக் மீரான், மாநகராட்சி அதிகாரிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையிலிருந்து நேற்று முன்தினம் (06.10.2025) திங்கள் கிழமை அன்று காணொளிக் காட்சி வாயிலாக கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் அரசு மருத்துவமனைக் கூடுதல் கட்டிடம் மற்றும் ஆலத்தூர் புதிய மாவட்ட மருந்து கிடங்கு கட்டிடங்களை திறந்து வைத்ததைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி பாராளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர் பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் துவக்கி வைத்தார்கள், இந்நிகழ்ச்சியில் பொதுப்பணித் துறை உதவி செயற்பொறியாளர் ராஜீவ், கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் முருகன், ஒன்றியக்குழுத் தலைவர்கள் அலமேலு ஆறுமுகம், திலகவதி நாகராஜன், பேரூராட்சி மன்ற தலைவர் ரோஜாரமணி துரைதாக பிள்ளை உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், தொடர்புடைய துறை அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மாதவரத்தில் நல உதவிகள் வழங்கல்!

சென்னை, அக். 8 –

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் தெற்கு பகுதி 28வது வார்டு, மூலக்கடை மற்றும் மாதவரம் அன்புத் தளபதி ஆட்டோ நிறுத்தத்தில், சென்னை பெருநகர் ஆட்டோ ஓட்டுநர் முன்னேற்ற சங்கத்தின் சார்பாக நடைபெற்ற விழாவில் மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., கலந்து கொண்டு ஆட்டோ ஓட்டுநர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கி வாழ்த்தினார்.

மாதவரம் பகுதி உதயநிதி ஸ்டாலின் ரசிகர் நற்பணி மன்ற தலைவர் டி.ஆர்.ரவீந்திரகுமார் ஏற்பாட்டில், எஸ்.கனிமொழி சுரேஷ் எம்.சி., டி.ஆர்.செங்கு ட்டுவன், ஆ.சசிகுமார், பி.மணிகண்டன், இ.ஏஞ்சல், எஸ்.ராஜி, சி. நந்தா, வயலட் மோகன், இ. விவேக் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



விருதுநகர் மாவட்டம் , சிவகாசி மாநகராட்சியில் , நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் , நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா , தலைமையில் நிதி , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் , ரூ .15 கோடி மதிப்பில் நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு அரங்கம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார் . உடன் சிவகாசி மேயர் சங்கீதா இன்பம், துணை மேயர் விக்னேஷ் பிரியா, மாநகரச் செயலாளர் உதயசூரியன், நகரச் செயலாளர் காளிராஜன், பொதுக் குழு உறுப்பினர் பால்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### நெல்லை கிழக்கு மாவட்டத்தில்

# ஒன்றிய, பேரூர் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் அறிவிப்பு!

நெல்லை, அக். 8 -

கழகத் தலைவர் முதலமைச்சர் அன்புத் தளபதியார் அவர்கள் அறிவுறுத்தலின்படி நெல்லை கிழக்கு மாவட்டம் இராதாபுரம், நாங்குநேரி சட்டமன்ற தொகுதி ஒன்றிய, பேரூர், கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க்கண்ட தேதிகளின் அட்டவணைப்படி நடைபெறுகிறது.என நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

அதன்படி இன்று (08.10. 2025) மாலை 4 மணி இராதாபுரம் மேற்கு ஒன்றியம் சமூக ரெங்கபுரம் கே.பி.சி. மகாலில் இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி ஏற்பாட்டிலும்,மாலை 6:00 மணி இராதாபுரம் கிழக்கு ஒன்றியம் சமூகரெங்கபுரம் கே.பி.சி.மஹால் இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெகதீஸ் ஏற்பாட்டிலும்,இரவு 7 மணி திசையன்விளை பேரூர் திசையன்விளை வைகரை மண்டபம் பேரூர் செயலாளர் ஜான் கென்னடி ஏற்பாட்டிலும்,நாளை (09.10. 2025 ) மாலை 5 மணி நாங்குநேரி பேரூர் நாங்குநேரி நாகமணி செட்டியார் மண்டபம் பேரூர் செயலாளர் எம். வானுவாமலை ஏற்பாட்டிலும்,6 மணி நாங்குநேரி கிழக்கு ஒன்றியம் பரப்பாடி ஒன்றிய செயலாளர் ஆரோக்கிய எட்வின் ஏற்பாட்டிலும்,மாலை 7மணி மூலைக்கரைப்பட்டி பேரூர் மூலைக்கரைப்பட்டி ஜெயம் மினி ஹால் பேரூர் செயலாளர் முருகையா ஏற்பாட்டிலும்,

11.10.2025 மாலை 4 மணி களக்காடு நகரம் அருணா திருமண மண்டபம் களக்காடு நகர செயலாளர் மணி சூரியன் ஏற்பாட்டிலும்,மாலை 5 மணி களக்காடு தெற்கு ஒன்றியம் களக்காடு அருணா திருமண மண்டபம் ஒன்றிய செயலாளர் பி.சி.ராஜன் ஏற்பாட்டிலும்,மாலை 6 மணி களக்காடு வடக்கு ஒன்றியம் களக்காடு அருணா திருமண மண்டபம் ஒன்றிய செயலாளர் செல்வகருணாநிதி ஏற்பாட்டிலும், 12.10.2025 காலை 10 மணி பாளை தெற்கு ஒன்றியம் வி.எம். சத்திரம் சண்முக மஹால் தெற்கு ஒன்றிய செயலாளர் சுபாஷ் சந்திரபோஸ் ஏற்பாட்டிலும், காலை 11 மணி பாளை மத்திய ஒன்றியம் வி.எம்.சத்திரம் சண்முக மஹால் மத்திய ஒன்றிய செயலாளர் போர்வெல் கணேசன் ஏற்பாட்டிலும்,

காலை 12 மணி பாளை வடக்கு ஒன்றியம் பக்கெட் மாநகர் பொன்மஹால் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் கண்ணன் ஏற்பாட்டிலும், மாலை 6 மணி பணகுடி பேரூர் பணகுடி ஹோட்டல் கிரீன் பாயிண்ட் பேரூர் செயலாளர் தமிழ்வாணன் ஏற்பாட்டிலும், மாலை 4 மணி வள்ளியூர் தெற்கு ஒன்றியம் ஆவரைகுளம் ஒன்றிய அலுவலகம் தெற்கு ஒன்றிய செயலாளர் சேவியர் செல்வராஜா ஏற்பாட்டிலும், மாலை 6 மணி இராதாபுரம் தெற்கு ஒன்றியம் நவ்வலடி காமராஜர் மண்டபம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எரிக்ஜூடு ஏற்பாட்டிலும்,13.10.2025 மாலை 4 மணி ஏர்வாடி பேரூர் ஏர்வாடி பேரூராட்சி திருமண மண்டபம் பேரூர் செயலாளர் அயூப் கான் ஏற்பாட்டிலும்,



மாலை 5 மணி திருகுறுங்குடி பேரூர் திருக்குறுங்குடி பகவதி மஹால் பேரூர் செயலாளர் கசமுத்து ஏற்பாட்டிலும்,மாலை 6 மணி வள்ளியூர் பேரூர் வள்ளியூர் எம்.எஸ் திருமண மண்டபம் பேரூர் செயலாளர் சேதுராமலிங்கம் ஏற்பாட்டிலும்,மாலை 7 மணி வள்ளியூர் வடக்கு ஒன்றியம் எம். எஸ்.திருமண மண்டபம் வள்ளியூர் மாவட்டக் கழக பொறுப்பாளர் ஏற்பாட்டிலும், 15.10.2025 நாங்குநேரி மேற்கு ஒன்றியம் நாங்குநேரி சுப்பு லட்சுமி மகால் மேற்கு ஒன்றிய செயலாளர் சுடலைக் கண்ணு ஏற்பாட்டிலும் நடைபெறுகிறது.

மேற்கண்ட பட்டியலில் உள்ளவாறு நடைபெற உள்ள ஒன்றிய, பேரூர், பொது உறுப்பினர் கூட்டத்தில் அந்தந்த ஒன்றிய, பேரூர் பகுதிக்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,ஒன்றிய, பேரூர், நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள் சார்பு அணிகளின் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் அணி நிர்வாகிகள், கழகத் தோழர்கள்,(BLA2) BDA,BLC உள்ளிட்டோர் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தெரிவித்துள்ளார்.

### விருதுநகர் வடக்கு மாவட்டம் - சிவகாசி மாநகரம்

# 6, 8, 11, 22, 24, 41, மற்றும் 44 ஆகிய வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

**விருதுநகர் வடக்கு மாவட்டம்**, **சிவகாசி மாநகரம்**, **1வது பகுதி**, 6வது வட்டச் செயலாளர் வி. ரமேஷ்குமார் அவர்களுக்குப் பதிலாக திரு. **ர. வைரமுத்து** (10பி, வடக்கு மாடவீதி, திருத்தங்கல் விருதுநகர்) அவர்கள் **6வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்** – 8வது வட்டச் செயலாளர் பொ. ஜீவானந்தம் அவர்களுக்குப் பதிலாக திரு. **சு. துரைப்பாண்டி** (151, சரஸ்வதி நகர், திருத்தங்கல், விருதுநகர்) அவர்கள் – **8வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;**

**2வது பகுதியைச் சேர்ந்த**, 24வது வட்டச் செயலாளர் எம். கலைவாணன் அவர்களுக்குப் பதிலாக திரு. **மா. ரவிச்செல்வம்** (315, முருகன் காலனி, திருத்தங்கல், விருதுநகர்.) அவர்கள் **24வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;**

**3வது பகுதியைச் சேர்ந்த** 11வது வட்டச் செயலாளர் எம். செல்வபாண்டி அவர்களுக்குப் பதிலாக திரு. **செ. சின்னத்துரை** (3, பாண்டியன் நகர் 1வது தெரு, திருத்தங்கல், விருதுநகர்) அவர்கள் **11வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்** – 22வது வட்டச் செயலாளர் டி. அந்தோணிராஜ் அவர்களுக்கு பதிலாக **திரு. மு. சரவணக்குமார்** (41, பொம்மையா நாயக்கர் தெரு, திருத்தங்கல், விருதுநகர்) அவர்கள் – **22வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;**

**5வது பகுதியைச் சேர்ந்த**, – 44வது வட்டச் செயலாளர் டி. திருஞானசம்பந்தர் அவர்களுக்குப் பதிலாக திரு. **இ. சுரேஷ்** (பாரதி நகர், சிவகாசி, விருதுநகர்.) அவர்கள் – **44வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;**

**6வது பகுதியைச் சேர்ந்த**, – 41வது வட்டச் செயலாளர் ஓ. சீனியப்பன் அவர்களுக்குப் பதிலாக திரு. **கு. ஸ்ரீதேவி** (108, பி.கே.எஸ். தெரு, சிவகாசி, விருதுநகர்.) அவர்கள் – **41வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்** நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18 .
நாள் : 07,10,2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



எல்லோருக்கும் எல்லாம் என மக்கள் பணியாற்றும், தமிழ்நாடு முதலமைச்சர், சமூக நீதி காவலர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியினை ஏற்று, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் முன்னிலையில், ரிஷிவந்தியம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் பெருமாள், திருக்கோவிலூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.அய்யனார், கருணாநிதி, தனுஷ், ரகோத், ஐயப்பன், ராஜ்குமார்,முத்தழகன், திவாகர்,பொன் அர்ஜுனன் ஆகியோர்களின் ஏற்பாட்டில், பிரிவுடையாம் பட்டு, பிள்ளையார்பாளையம், வீரட்டகரம், வேங்கூர், சாங்கியம் ஆகிய ஊராட்சி சேர்ந்த அ.தி.மு.க. த.வெ.க., பா.ம.க. நிர்வாகி ஆகியோர்கள் தங்களது ஆதரவாளர்கள் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்டோருடன் நமது திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர், புதிதாக கழகத்தில் இணைந்த அனைவருக்கும் மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்எல்ஏ கழக இரு வண்ண வேஷ்டிகள், துண்டுகள் மற்றும் சேலைகள் அணிவித்து தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.